# இந்துசாதனம்

விரோதி வருஷம் (1889)
ஆவணி மாதம் 28-ந் உ ஆரம்பமானது.

செவ்வாய் வெள்ளி தோறும் வெளிவருவது

Registered as a News Paper in Ceylon
P M G No. H A 59/300 of 1939

மாசில் வீணையும் மாலை மதியமும், வீசு தென்றலும் வீங்கிள வேனிலும், மூசுவண்டறை பொய்கையும் போன்றதே, ஈசனெந்தை யிணையடி நீழலே.

[புத் - ௬௫] யாழ்ப்பாணம்:- கர வருஷ பங்குனி மீ உசுஉ செவ்வாய்க்கிழமை (8 April 1952) [இல - ௩]


# எவ்வுயிரும் தன்னுயிர்போல் எண்ணும் நிலை

## ஆன்ம இடேற்றத்துக்கு அதுவே வழி

உயிரளவில் எல்லாமொன்றுதான். நமதுயிர்வேறு, நமது அயலவனின் உயிர் வேறல்ல. எண்ணளவில எண்பத்துநான்கு நூறுயிரயோனி பேதங்களிருந்த போதிலும் ஒரே உயிர்ச் சக்தியே எல்லாவுயிர்களிலும்வியாபித்திருக்கின்றது. உடம்புகள் பலவாயிருக்கலாம். ஆனால் உயிர் ஒன்றேயொன்றுதான். உயிர் நிலை உடம்பு ஆகும்: ஆனால் உடல் நிலை உயிரல்ல. உடம்போ அழிவது. உயிர் அழிவதில்லை. உடல் எல்லைப்படுத்தப் பட்டது. ஆனால் உயிர் வியாபகமானது. உடலுக்குச் சேதனமாயுள்ளது உயிர். உயிரில்லா உடம்பு ஓர் முண்டமேமுண்டம்தான். அதை யாவரும் ஈனமாகப் பிணமென்று வெறுப்பார்கள். அதி சூக்குமமான பொருள் உயிர். உடலோ பஞ்ச பூதங்களாலாய தூல வஸ்துவாம். தூலப் பொருட்களாலாக்கப்பட்ட ஓர் யந்திரத்துக்கும் உடலுக்கும் எவ்வளவும் வித்தியாசமில்லை. இச்சடமெனும் யந்திரத்தை யியக்கும் சக்திதான் உயிரெனப்படுவது. மின்சார சக்திபோல அச்சத்தியும் எங்களுக்குமுளது. அதற்கெனத் தயாரிக்கப்பட்ட திரட் சாடிகளுக்குள் மின்சாரசக்தி உறைவது போல அதற்கேற்ற உடற்களிலேயே உயிர்ச் சக்தியும் தங்கும். உயிரின சுயாதீனத்தை உடல் பந்தப்படுத்த முடியாது. உடல் கெட்டால் உயிர் அதை விட்டுப் பறந்தோடி விடும். அதாவது பிரசன்னமாகவிருந்த உயிர் ஒளித்துவிடும். உயிர் அற்றுப்போவதுமில்லை, அழிவதுமில்லை.

### உயிரும் உடலும் சிவமுஞ் சத்தியுமாம்

எல்லா வுடல்களும் அதே பஞ்சதன் மாத்திரைகளிலிருந்து உற்பத்தியாகின்றன. ஆகையால், அவை பல ரூபங்களை யுடையனவைகளாயிருந்தாலும் உடம்பெலாவற்றையுமொன்றாகவே கருதவேண்டும். நாமரூபமுள்ள பொருள்களுள் உடல்கள் எனப்பட்டவை ஒரு தினிசு. அவை ஒரே விதமான யாக்கை விதிகளுக்குக் கட்டுப்பட்டவை. பிறப்பு, மூப்பு, பிணி, இறப்பு இவைதாம் எலலாவற்றுக்குமுள்ளவை. ஒரே மாதிரியான சீவியத்துடன் அவைகள் ஒன்றெனக் கருதப்படுவதற்கு இன்னுமொரு ஆதி காரணமுண்டு. எல்லாம் பூமாதேவியின அம்சங்கள். இந்த எண்பத்துநான்கு நூறுயிரயோனி பேதங்களின நாமரூபங்கள் அப் பூமாதேவியின நாமரூபங்களல்லாது வேறல்ல. பூமாதேவியே பல பல சொரூபங்களாகக் காட்சியளிக்கிறாள்.

காயமே கோவில் என்றார் ஒவ்வொரு உடலும் ஒவ்வொரு கோவில். எல்லாக் கோவில்களிலும் ஒரே கடவுள்தான் தானெழுந்தருளியிருக்கின்றார். அநந்த நாமங்களுடன் தோற்றமளிக்கும் ஏகன் அனேகன் எங்களிறைவன். அவனே எங்கள் உயிருக்கு முயிராய் எமக்குள்ளும் புறமுமாய் எல்லாமாய் அல்லவுமாய் அனைத்துயிரையும் அணைத்து ஒன்றாக நிற்கின்றான். நமக்கு அனியமான தொன்றுமில்லை அனைத்துயிரும நாமே. அவ்வுண்மையினை எந்நாளும் அதை நாம மறக்கப்படாது.

### அன்பு பிணைப்பது பகை பிரிப்பது

நம்மை யெவ்வளவு நேசிக்கிறோமோ அவ்வளவுக்குப் பிறரையும் நேசிக்க வேண்டும். அன்பை விதைத்தால்தான் அன்பை அறுக்கலாம். பாகற்கொட்டை போட்டுச் சுரைக் கொடி முளைக்குமா? அன்பு ஆத்மவை யுண்டாக்கும், பகை துன்பத்தை விளைவிக்கும். மக்களுக்கிடையே அன்பு நிகழ்ந்தால் மண்மேற் சமாதானம் தானாகவே யுண்டாகும். உலக சமாதானத்திற்கு வேண்டிய உயர்ந்த இலட்சியம இதுவே. உள்ளத்தில் அன்பு நிலவாமல் சமாசப் பேச்சுகளினால் பலன் யாதொன்றுமில்லை. இரகசியமாகப் படைகளை விருத்தி செய்துகொண்டு வெளியிற் சமரசப் பேச்சால என்ன லாபங் கண்டது? உலகிலங்கண் அச்சமும் அவநம்பிக்கையுமே தலைவிரித்தாடுகின்றன.

எல்லாவுயிர்களும் ஒரே சூலியிருந்து செனித்த வுரிமையைக் கொண்டே உலகிற்றோன்றிய அவதார புருஷர்கள் ஸ்தாபித்த மதங்கள், சாதி பாஷை, தேச வித்தியாசமின்றி, உலகமெங்கும் பிரஸ்தாபமாக விளங்குகின்றன. இயேசநாதர் தன் போதனை முழுவதையும் உன்னைப்போலஉன் அயலவனை நேசி என்னுமருமொழிக்குள்ளடக்கியுள்ளார் ... குகளமைத்துவிட்டார் ... பொருள் ஆவி மூன்றினும் கடவுளைப் பக்தி பண்ணுவாயாக எனும் தேவ கட்டளைக்கு நிகரானதிதுவெயான்றுமே யென அவர் குறிப்பிட்டிருக்கிறார். புத்தபகவான் நிலைநாட்டிய தர்மச் சக்கிரமும் ஜீவகாருண்யமுமே சிறந்த சீலம் எனும அரிய போதனையையே அடிப்படையாகக் கொண்டது மகமது நபியும் ஒரே கடவுளையெல்லாருக்கு முள்ளவர் எனவே மனிதருக்குள் சமத்துவமும் சகோதரத்துவமும் உண்டாக்குப்படி இஸ்லாத்தை ஸ்தாபித்தார். மனிதருக்குள்ளே ஈசுரபத்தியையும் மண்மேற் சமாதானத்தையு முண்டாக்குவதே இஸ்லாமின் நோக்கமாகும்.

தொடர்ச்சி 4-ம் பக்கம்

திருத்தொண்டர் திருநாள்

# சிவனடியார் தொண்டு செய்து சிவனடி பெற்றார்

## ( முனையடுவார் திருநாள் இன்று )

சோழ நாட்டிலே திருநீடூரிலே வேளாண்குல தலைவராய் வாழ்ந்த முனையடுவார் நாயனார் மாற்றார் முனை கிற்க மாட்டாதவர்கள் தமது உதவியை வேண்டும்பொழுது அவர்களுக்காகப் போர்முனைக்குச் சென்று பகைவரை வெல்பவர். அத்தொண்டின் பொருட்டுப் பெறும் திரவியத்தைச் சிவனடியார்களுக்கு வேண்டியவாறு கொடுத்து அவர்களைச் சீர்பெறத் திருவமுது செய்விப்பாராயினர். போர்முனைக்குச் செல்லும் தொழிலுடைமையால அவருக்கு முனையடுவார் நாயனார் என்னுந் திருநாமமெழுந்தது. இவ்வாறு செய்த சிவனடியார் வழிபாட்டின் பயனாய்ச் சிவலோகத்தை யடைந்து சிவபதம் பெற்றார்.

"மற்றிந் நிலைமை பன்னெடுநாள்
வைய நிகழச் செய்துவழி
யுற்ற வன்பின் செந்நெறியா
லுமையாள் கணவன் றிருவருளாற்
பெற்ற சிவலோ கத்தமர்ந்து
பிரியா வுரிமை மருவினார்
முற்ற வுழந்த முனையடுவா
ரென்னு நாம முன்னுடையார்."

உ

## இருள்கடிந் துள்ளத் தெழுகின்ற ஞாயிறே!

திருச்சிற்றம்பலம்

இன்றெனக் கருளி யிருள்கடிந் துள்ளத்
தெழுகின்ற ஞாயிறே போன்று
நின்றநின் றன்மை நினைப்பற நினைந்தேன்
நீயலாற் பிறிதுமற் றின்மை
சென்றுசென் றணுவாய்த் தேய்ந்துதேய்ந் தொன்றாந்
திருப்பெருந் துறையுறை சிவனே
ஒன்றுநீ யல்லை யன்றியொன் றில்லை
யாருன்னை யறியகிற் பாரே.

திருச்சிற்றம்பலம்

## சுவாமி சிவானந்தர்

வான்கூவறிலிருந்து சுவாமி சிவானந்த அவர்கள் வெளியேற வேண்டுமென்னும் கனடா அரசாங்கத்தின் தீர்மானத்தை விளக்கிப் பேசியபொழுது சுவாமிகள் தாம் காட்டிக்கொடுக்கும் யோக சாதனைகளுக்குப் பணம் பெறுகிறார் ஆதலின் அவ்வாறு விதித்தோம் என்று ஓர் அரசாங்க அதிகாரி கூறுகிறார்.

அன்னார் கூற்றின் பொருளை நமைதியாயிருந்து பார்ப்போம்.

# மனம் அடங்கும்மாண்புஉடைத்தாதல்

## மகத்தான எடுத்துக்காட்டு மகாத்மா காந்தி

மொழியடக்கம் மக்களுக்கு மிக வேண்டற்பாலது. "மிகுதியாக நினை; குறைவாகப் பேசு" என்பது ஒரு அறிஞரின் அமுத மொழி. குறைவாகப் பேசுவதிலும் குற்றமின்றிப் பேசவேண்டும். குற்றமின்றிப் பேசுவதிலும் பயன்தரும் சொற்களையே பேச வேண்டும்; பயனும் மெய்யுணர்வு பிறப்பதாயிருக்கவேண்டும். இவையே மொழியடக்கத்தின் இலக்கணம்.

ஏன் மொழியடக்கம் வேண்டுமெனின், சிறிது கூறுவோம். மக்களியற்கை நன்மையினும் தீமையையே விரைந்து பற்றுந்தன்மையுடையது. அறிஞர்கள் கூறும் அருங் கருத்துக்கள் நமது உள்ளத்தில் நன்கு அமைவதில்லை. அவர் தவறிக் கூறிவிட்ட, அல்லது செய்துவிட்ட ஒன்றிரண்டான பிழைகளே நம் நெஞ்சில் ஆழப் பதிகின்றன. பதிந்தவை நெஞ்சைப் பிளந்தாலும் அகலுவதில்லை. இதென்ன கொடுமை!

இந் நிலையில் தீய சொற்களைத் தவறியோ, வேண்டுமென்றோ ஒருவர் மொழிந்துவிடின், அதனால் மொழியப்பட்டோரின் துக்கினால் மொழிந்தோர் மனம் வருந்த நேர்வதும், அதன் வழியே இரு ... உலகில் கண்கூடு.

### சொல்லிழுக்கினால் வருஞ் சோர்வு

பெரிய இல்லறச் சண்டைகளிலும் பிணவுகளிலும் காரணமென்னவென்று வினவுவோமாயின், சிறிய சொல்லின் பெரிய வல்லமை நன்கு புலனாம். "பேசப் போயினையோ, சாசப் போயினையோ" என்பது ஒரு பழமொழி. "யாகாவாராயினும் நாகாக்க" என்றார் வள்ளுவனார். காவாக்கால் என்ன விளையுமென்று வினவுவார்க்கு, "சோகாப்பர் சொல் லிழுக்குப் பட்டு" என்று விடையளிக்கிறார்.

தொடர்ச்சி 4-ம் பக்கம்

அரசியல் அலை

# வாக்காளருக்குத்தருணம் வாய்த்துவிட்டது

## பாராளுமன்றப்பொதுத்தேர்தல்

### சித்திரை 28-ல் விண்ணப்பப்பத்திரம்

ஓநாய் ஓநாய் என்று ஓயாது பயப்படுத்தினவனுக்கு ஒருநாள் நிச்சயமாக ஓநாய் வந்தது போல, பொதுத்தேர்தல், பொதுத்தேர்தல் என்று சொல்லிக்கொண்டு, ஆனால் ஆயத்தம் இல்லாத அபேட்சகர்கள் திடீரெனத் திடுக்கிடச் செய்யப்பட்டனர்.

அழயேசிங்கவின் பிரதமர் பாராளுமன்றச் சபையை இன்று தொடக்கம் கலைத்துவிட்டனர்.

அபேட்சகர்கள் விண்ணப்பப்பத்திரங்களைச் சித்திரை இருபத்தெட்டாந்திகதி அன்று சமர்ப்பிக்க வேண்டும்.

வைகாசி மாதம் 26 தொடங்கி 28 வரைக்கும் தேர்தல் நடைபெறும் என்று அநுமானிக்கப்படுகிறது.

வைகாசி 31 ம் திகதியோடு தேர்தல் பூர்த்தி ஆகவேண்டியதென்றும் புதிய பாராளுமன்றம் ஆனி 10 ம் திகதி ஆரம்ப

(தொடர்ச்சி 4-ம் பக்கம்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

THE SAIVAPRAKASA PRESS.

வாழ்க அந்தணர் வானவர் ஆனினம்
வீழ்க தண்புனல் வேந்தனு மோங்குக
ஆழ்க தீயதெல்லாம் அரனாமமே
சூழ்க வையகமுந் துயர் தீர்கவே.

# இந்துசாதனம்

யாழ். கர ஞு பங்குனி மீ
உசுவ செவ்வாய்க்கிழமை

## யாரைத் தெரிவது?

சுதந்திரம் பெற்ற இலங்கையின் முதற் பாராளுமன்றப் பிரதிநிதிகள் சபை இன்றோடு ஒழிந்தது. வருகிற ஆனி மாதத்திலே கூட வேண்டிய புதுச் சபையை வைகாசி மாதம் முடியு முன்னர் தெரிந்தெடுக்கும் பொறுப்பு வாக்குரிமை பெற்ற குடிசனங்களிடத்தே இருக்கின்றது.

அரசாங்கத்தை அமைக்கவும் அகற்றவும் தத்துவம் வாய்ந்தவர்கள் குடிசனங்களே. சுருங்கச்சொல்லுகில் இலங்கை வாழ் மகாசனம் தங்கள் அரசியல் வாழ்க்கையைத் தாங்களாகவே வகுக்கவேண்டியவர்கள் ஆகிறார்கள். எனவே பிரதிநிதிகளைத் தெரிவு செய்யும் உரிமையின் பெற்றி இம்மாத்திரமன்று.

இப்போதிருக்கும் நிலைமையில் அகில இலங்கைக் கட்சிகளாகப் பல திறத்திலும் வேறு தரத்திலும் உள்ளனவாக இருக்கும் அரசியற் கட்சிகள் புதிய அரசாங்கத்தை அமைக்கும் பொறுப்பைப் பெற்றுக்கொள்வதற்கு ஒன்றோடொன்று எதிர்கொள்கின்றன.

பெயரளவிற் கட்சிகள் இருந்தபொழுதிலும் வாக்காளர்கள் அனைவரும் இக்கட்சிகளில் அங்கத்தவர்களாக இருக்கின்றார்களோ என்பது சந்தேகம். எனவே கட்சிகளின் வெற்றி உண்மையாகப் பொதுசன எண்ணத்துக் கறிகுறியாக வேண்டுமேயானால் கட்சிகள் தங்கள் கொள்கைகளை அழுத்தம் திருத்தமாகக் குடிசனங்களுக்கு அறிவித்தல் வேண்டும். கொள்கைகளை விளங்கப்படுத்தாது கட்சியிலுள்ளவர்களை இகழ்ச்சி செய்வதும் வசைமாரி பொழிவதும் மரபாகாததுமல்லாது அவற்றைக் கையாளுகின்றவர்களின் பலவீனத்தைக் காட்டும்! துண்டுப் பிரசுரங்களிலோ மேடைப்பிரசங்கங்களிலோ மனித ஒழுக்க நெறி தவறாது தத்தம் கொள்கைகளைத் தெளிவுறச் சொல்லியும் மற்றையவர்கள் கொள்கைகளினின்றும் தாம் வேறுபடுவதை விளங்கப்படுத்தியும் அவற்றால் மகாசனம் அடையும் நன்மைகள் எவை என்றும் அவற்றை ஆதரிக்காதவர் கொள்கையினால் நாட்டிற்கு எவ்வித தீமை விளையுமென்பதையும் காய்தல் உவத்தல் இன்றி, ஏச்சும் ஏளனமுமின்றி அறிவுறுத்துவதே பிரதிநிதித்துவத்தை வகிக்கக்கூடியவர்கள் முறையாகும்.

பிரதிநிதிகளாக வர முன்னிற்பவர்கள் கொள்கைகளில் எவ்வித வேறுபாடு கொண்டவர்களாயிருந்த பொழுதிலும் தெரிவு நடத்துங் காலத்தில் வாக்காளர்களுக்கு உண்மையான வழிகாட்டிகளாக இருத்தல் வேண்டும். ஒரு தொகுதிக்கு நிற்கும் அபேட்சகர் எல்லாரும் தெரிவுக்காகப் போக்கு வரத்து வசதிகள் தாங்கள் ஒழுங்கு செய்யப் போவதில்லையென்றும் மதுபானம் முதலிய தீமைகளை அறவே கடிந்து விடுவதென்றும் நிச்சயிப்பார்களேயானல் தெரிவுகள் ஒருவித கலவரமுமின்றிச் சமாதான முறையிலே உண்மையான வாக்காளர்களின் உள்ளக் கிடக்கையை அறிவுறுத்துவனவாக இருக்கும்.

தெரிவு காலங்களில் மதுவழங்குதலும் வாக்குரிமையை மற்றவர்களிடமிருந்து அபகரித் துபயோகிப்பதும் பணஉதவி புரிவதும் பலாத்காரஞ் செய்வதும் இன்ன பிறவுமாகிய தீமை பயக்கும் செயல்களை நடவாது தடுப்பதற்குப் பிரதிநிதிகளாக முன்வரும் பெரியோர்களே முயற்சிக்க வேண்டும்.

இந்திய மாபெருந் தேர்தலிலே போக்கு வரத்து வசதிகள் அபேட்சகர்கள் செய்து கொடுக்கக் கூடாதெனச் சட்டம் இட்டபடியால் வாக்காளர்கள் தாமாக உணர்ந்து உண்மையான தீர்ப்பை அளித்தார்கள்.

தேர்தலுக்கும் ஓர்போர் முறை. யுத்த களத்துக்கும் அதற்குரிய ஒழுக்கங்கள் வகுக்கப் பட்டிருக்கின்றன. மறைந்து நின்று மகாவீரன் வெடி வைக்க மாட்டான். பின்னுற் சென்று முதுகிற்கத்தியாற் குக்கமாட்டான், எதிர் முகமாக நின்றே போர்செய்வான். இராமாயண யுத்தத்திலோ பாரதப் பெரும் போரிலோ உக்கிரமான சண்டை நிகழ்ந்த போதிலும் நேர்மையான முறைகளையே கையாண்டனர். இவையெல்லாம் ஈழநாட்டு வழக்கம் என்று தொன்று தொட்டு நிலவி வருகின்றன. இப்பெரும் மரபைத் தேர்தலிலும் கையாள வேண்டிய பொறுப்பு வாக்குரிமை பெற்ற மகாசனங்களிலும் பார்க்க அவ்வாக்கை அவாவி நிற்கும் அபேட்சகரிலேயே தங்கி இருக்கிறதென்பதை ஞாபகமூட்ட விரும்புகின்றோம்.

## சமரசம் உண்படுன்னைத் - - தருணம் இதுவே!

தமிழ் மக்கள் சமூகத்திற் பிளவுகள் பெருகிப் பெருந் துன்பம் விளைக்கின்றன என்பது பெரும்பான்மையோர் ஒப்புக் கொள்ளும் ஓர் உண்மை. ஆகவினாலேயே தமிழ் மக்கள் சமூகத்திற் சமரசம் உண்டு பண்ண உழைக்கும்பொருட்டுச் 'சமரசத் தொண்டர்சபை' எனப் பெயரிய சபை ஒன்றை அமைக்கத் தமிழ்மக்கள் சிலர் விழைந்தனர்! அரசியற் கட்சிகளிடையே சமரசம் ஏற்படுத்த முயல்வதே அச்சபையின் முதல் நோக்கமாக எடுத்துக் காட்டப்பெற்றிருந்தது. இத்தகைய சபை அமைப்புக்கு உதவுமாறு அறிவுரைகளும் ஆர்வ மொழிகளும் அங்கத்துவ விண்ணப்பங்களும் ஆக்லெழுக்காய் வந்துகொண்டேயிருக்கின்றன.

இவை இவ்வாறிருப்ப அரசாங்க பொதுத் தேர்தல் மிக அணிமையில் நடத்த நிச்சயிக்கப்படலாயிற்று. அபேட்சகர்கள் தத்தம் சார்பாக உழைக்கத் தொடங்கிவிட்டனரென்றும் அறிய வருகிறது. இத்தகைய நிலைமையில் சமரசத் தொண்டர் சபை உருவாகி உழைக்க வேண்டுமானால் இத்துறையில் ஆர்வமுள்ள ஒவ்வொருவரும் ஒரேமனமாய் ஒரேமுகமாய் உழைக்க உடனே முன் வருதல் வேண்டும்!! கால வரையறை கூறவதேயானல் ஒருகிழமைக்குள் சபை உருவாகி உழைக்கத் தொடங்கவேண்டும். இன்றேல் இத்தொண்டாற்ற இப்போ இயலாது என்று அறிஞர் சிலர் கருதுகின்றனர். "எப்பொருள் யார் யார் வாய்க் கேட்பினும் அப் பொருள் – மெய்ப்பொருள் காண்பதறிவு" என்றபடி அன்பர்கள் ஆராய்ந்து தீர்மானிப்பார்களாக.

சமரசத்தொண்டன்

## "விசாரணைச் சபை வேண்டும்"

### இலங்கை வானொலி தமிழ்க்கலை மன்ற வருடாந்தக் கூட்டம்

கலைஞர்கட்கு அந்தஸ்துக் கொடுத்தலும் வளர்ப்பதுந்தான் நோக்கம், அவமதிக்கப்படுவது கலைஞர்கட்கு மட்டுமல்ல சமுதாயத்திறகு இழுக்கு என்று நேற்று முன் தினம் வெள்ளவத்தைச் சைவமங்கையர் கழக மண்டபத்தில் கூடிய இலங்கை வானொலித் தமிழ்க்கலை மன்ற வருடாந்தக் கூட்டத்துக்குத் தலைமைவகித்த பண்டிதர் கா. பொ. இரத்தினம் அவர்கள் குறிப்பிட்டார். அவர் மேலும் கூறியதாவது: கலைஞர்களின் கடிதங்களைப் பார்க்கும்போது நன்மை கருதி உழைக்கும் விஷயத்தில் அவர்கள் அலட்சியமாக நடத்தப்பட்டிருக்கின்றார்கள் என்று தெரியகிடக்கின்றது. இதனால் கலைஞர் பலர் ரேடியோ சிலோனில் வெறுப்படைந்திருக்கின்றனர். இந்த வெறுப்புக் கூடிய விரைவில் நீங்கிவிடும் என்று எதிர்பார்க்கின்றேன்.

சென்ற ஆண்டு அறிக்கை காரியதரிசியால் வாசிக்கப்பட்டு அங்கீகரிக்கப்பட்டது. திரு. நா. ப. பாலசந்திரன் அவர்கள் சங்கம், இதுவரை கலைக்காகச் செய்த தொண்டுகளைக்குறிப்பிட்டு மேலும் தொடர்ந்து கருமமாற்றுவதாக உறுதி கூறினர்,

தனதிகாரி தமிழ்க்கலை மன்றத்தின் பணநிலைமையைப் பெருக்கியதைப் பலரும் பாராட்டிப் பேசினர். கலைஞர்கள் கௌரவமாக நடத்தப்படவும் தாம் உயரவும் விசாரணைச் சபை ஒன்றை உடனடியாக நியமித்துத் தரும்படி சபையினர் மந்திரியைக் கேட்டும் தீர்மானமொன்று நிறைவேற்றினர்.

புதுவருட உத்தியோகத்தர்கள் பின் வருபவர்கள் தெரிவு செய்யப்பட்டனர். தலைவர் திரு. கா. பொ. இரத்தினம் அவர்கள், உபதலைவர்கள் திருவாளர்கள் C. R. மகாராஜா, V. கணபதிப்பிள்ளை, N. சண்முகரத்தினம், திருமதி பகவதி ரங்கராஜன். காரியதரிசி: திரு. வே. சிவஞானம் அவர்கள், உபகாரியதரிசி: திரு. R. S. சோதிநாதன் அவர்கள், தனதிகாரி: திருமதி பொன்மணி குலசிங்கம், உப தனதிகாரி: திரு. D. P. யேசுதாசன் காரிய சபை: திருவாளர்கள், A. சோமசுந்தரம், P.S. மணி ஐயங்கார், S. R. ஐயர், S. ஆறுமுகம்பிள்ளை, கா. ப. பாலச்சந்திரன், திருமதிகள்: கமலா ஹரிஹராஜயர், பரஞ்சோதி அம்மாள் இராஜமாணிக்கம், மு. லோகேஸ்வரம், பரிமளா தேவி விவேகானந்தா.

பத்திரிகை நடத்தல், கலை வளர்ச்சி சம்பந்தமாக அலசி ஆராய்ந்தனர். சிறந்த முறையில் ஆண்டு மலர் ஒன்று வெளியிட ஒழுங்குகள் நடைபெறுகின்றன. முத்தமிழ் விழா ஒன்று நடத்த ஏற்பாடுகள் நடக்கின்றன.

## வாழ்க்கை வானில்

வளர்மதி

### வாக்காளர்களே உசார்!

வந்து விட்டது, வந்து விட்டது, பல நாள் எதிர்பார்த்த பாராளுமன்றத்தேர்தல் வசதற்படியருகே வந்து விட்டது! எங்கும் பரபரப்பு. அபேட்சகர்களை எதிர்பார்த்தவண்ணமாக வாக்காளர்கள் இருக்கிறார்கள். வாக்காளர்களை வழி தேடிக்கொண்டு உலாவுகிறார்கள் அபேட்சகர்கள்.

ஒவ்வொரு வாக்காளனும் அபேட்சகருக்கு ஏதோ இனமுறையில் வந்துவிடுகிறான். ஒன்றில் அண்ணன், மாமன், மச்சான் அல்லது அடுத்தபடி அல்லது கல்யாண சம்பந்தத்தால சேர்ப்பு இவ்வாறு 'மாட்டுக்குத் தண்ணீர் விடும் பள்ளிக்கூடப்பிள்ளைகள் விளையாட்டிலே' சங்கிலித் தொடுப்புப் போல அபேட்சகர் ஒருமுறை தேர்தல் காலத்திலே புதிதாகக் கண்டு பிடித்துவிடுவார்.

### ஒலிபரப்பி - மோட்டார் இரதம்

வாக்காளர்கள் யாத்திரமா உசார்! இல்லை. விஞ்ஞான சாத்திரம் கண்டுபிடித்த பல வகை இயந்திரங்களும் இவ்வாறே. ஒலிபரப்பி எங்கே? உண்டு, மோட்டார் இரதம் எங்கே இருக்கிறது? என்ற விசாரணை தொடங்கிவிட்டது. மனிதன் தனது சக்தியிலும் தனது முயற்சியிலும் தங்கி இருக்கவில்லை.

### கோயில்கள்! மடங்கள்!

அதுமாத்திரமா? ஓடு போடாத கோயில்களும் வேயப்படாத மடங்களும் இடித்த சுமை தாங்கிகளும் பாழ்ங்கிணறுகளும் எல்லாம் உசார்! காற்றுள்ளபோதே தூற்றிக் கொள்ள வேண்டும்.

### மது! அதுவுந்தான்!

இவற்றிற்கெல்லாம் மேலானதொன்றுண்டல்லவா? போதை. அது இப்போதைக்கு மிக மிக வேண்டப்படும் ஒரு பெரும் பொருள். மனிதன் தன ஆற்றலில தன் வசத்தில் நிற்க முடியாதாம்,

## செய்தித் திரட்டு

=0=

கதிர்காமசுவாமி ஸ்ரீ விஷ்ணு ஆகிய இருவருக்கும் மொறட்டுவவில் ஆலயம் ஒன்று அமைக்கப்பட்டு திரு. H. W. அமரசூரிய அவர்களால் திறந்து வைக்கப்பட்டது.

X X X

எல்லைப்புறக் காந்தியெனப் பெயர்பெற்ற அப்துல் கபார் கான் அவர்கள் தேகநிலைமை காரணமாக மறியற் சாலையிலிருந்து வைத்திய சாலைக்கு அனுப்பப்பட்டிருக்கிறார்.

X X X

இஸ்லாமிய நாடுகளின் மகாநாடொன்று 15-4-52 ல் கராச்சியிற் கூடுவதற்குப் பாகிஸ்தான் அரசாங்கம் ஒழுங்கு செய்திருக்கின்றது. அழைப்புப் பத்திரங்கள் அனுப்பப்பட்டனவேயன்றி அம்மகாநாட்டின் நோக்கம் என்னவென்று அறிவிக்கவில்லையாம். நோக்கத்தை அறியப் பலர் முயலுகின்றனர்.

X X X

புதிய பிரஜாவுரிமை விண்ணப்பபத்திரங்கள் பரிசீலனை செய்யப் பெறாமையால் இலங்கை இந்திய மக்கள் வரவிருக்கும் பொதுத் தேர்தலில் வாக்குரிமை யிழந்தவராவர் எனத் தெரியவருகிறது. இது முறை போவென்று உள்ளம் நொந்து பலர் வினவுகின்றனர்.

X X X

இந்திய ஆபிரிக்க மக்கள் சேர்ந்து 4-6-52-ல் நைரோபியில் கூட்டிய கூட்டமொன்றைப் பொலிசார் தடுத்துவிட்டனர்.

X X X

ருஷிய தளபதி ஸ்டாலினுடன் உள்ளங்கலந்து உரையாடியதன் பின், நாடுகளுக்கிடையே யுள்ள வேறுபாடுகளெல்லாம் நல்ல மனத்துடன் கலந்து பேசித் தீர்க்கலாம் என்று உறுதியாய்க் கூறுகின்றார் சேர் இராதாகிருஷ்ணன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழ்ப் பாடசாலைகளும் விளையாட்டுப் போட்டியும்

## வலி - வடக்கு நிகழ்ச்சி விபரம்

வலிகாமம் வடக்கு வட்டார வித்தியாதரிசி திரு. A. சந்திரசேகரம் அவர்களும் வலிகாமம் வடக்கு தமிழாசிரிய சங்கமும் சேர்ந்து உழைத்ததன் பலனாகக் காட்சியளித்த வி விளையாட்டுப் போட்டி தமிழ்ப்பாடசாலைகளும் இத் துறையில் உயர்ந்த ஸ்தானத்தை அடைந்துள்ளன என்பதற்குப் போதிய சான்று பகர்ந்தது. 31-3-52 திங்கட் கிழமை பிற்பகல் 2¾ மணி தொடங்கி தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரி மைதானத்தில் இப் போட்டி நடந்தேறியது. வித்தியாதிகாரி திரு. S. U. சோமசேகரம் அவர்கள் தலைமை தாங்கினர். மைதானத்தின் நடுவில் சங்கக்கொடியை உயர்த்தி வைத்தார். அவ்வேளையில் தேசிய கொடிப் பாடல்கள் மாணவர்களால் பாடப்பட்டன.

### பெற்றோர் ஊக்கம்

பெற்றோர் ஆசிரியர் மாணவர் யாவரும் போட்டியின் போது காட்டிய ஊக்கம் பெரிதும் பாராட்டற்பாலது. 25க்கு மேற்பட்ட பாடசாலைகளிலிருந்து சுமார் 350 மாணவர் வரை போட்டி நிகழ்ச்சிகளில் பங்குபற்றினர். பல ஆங்கிலக் கல்லூரி வதியர்களும் முகாமைக்காரர்களும் தேகப் பயிற்சி ஆசிரியர்களும் இப் போட்டிக்குச் சமுகம் அளித்ததுமன்றித் தத்தமக்கியன்ற சேவைகளிலும் ஈடுபட்டுழைத்தமைக்குத் தமிழாசிரிய உலகம் பெரிதும் நன்றி பாராட்டுகின்றது. போட்டி மாணவர்களும் தமது திறமையை நன்கு காட்டினர். சேர். கனகசபை வித்தியாசாலை ஆசிரியர் யாவரும் ஒருங்கு சேர்ந்து விளையாட்டிற் பங்குபற்றிய யாவருக்கும் இலவசமாகப் பானவகை வழங்கினர். வித்தியாதரிசி திரு. A. சந்திரசேகரம் அவர்கள் தலைமைதாங்கிய வித்தியாதிகாரியவர்களின் குணநலங்களைப் பாராட்டி அவரது சமுகத்தினால் எங்கள் போட்டி பெருமையடைந்ததென்பதைச் சுட்டிக் காட்டி அவருக்கும் அனைவருக்கும் தமது நன்றியறிதலைத் தெரிவித்தார். பின்னர் பிரதமரின் மரணத்திற்காக 2 நிமிஷம் மௌனம் அநுட்டிக்கப்பட்டது.

### பரிசு வழங்கல்

தலைவரவர்கள் பதில் கூறு முகமாக எழுந்து வட்டார வித்தியாதரிசி நிர்வாகத் திறமைகளைப் பாராட்டி இப்போட்டியும் தமிழ்ப் பாடசாலைகளில் யாவரும் பின்பற்றவேண்டிய எடுத்துக்காட்டான முறையில் அமைந்ததை வியந்து பேசினார். ஈற்றில் வெற்றி பெற்ற மாணவர்களுக்கு வெள்ளிக் கிண்ணங்களும் பிற பரிசில்களும் தகைமைப் பத்திரங்களும் தலைவரவர்களால் வழங்கப்பட்டன. எல்லாப் பாடசாலைகளுள்ளும் அளவெட்டி சதானந்த வித்தியாசாலை மிகத் திறமை காட்டியதற்காக திரு. S. J. V. செல்வநாயகம் அவர்களால் அளிக்கப்பட்ட வெள்ளிக்கிண்ணம் விசேட பரிசிலாக அளிக்கப்பட்டது. அவ்வாறே முழுப்பகுதியிலும் அதிகம் திறமைகாட்டிய மல்லாகம் அ. மி. பாடசாலை மாணவன் செல்வன். ஐ. வல்லிபுரம் என்பவருக்கும் அதிகம் திறமை காட்டிய மாணவி செல்வி சி. செல்வநாயகம் என்பவருக்கும் விசேட வெள்ளிக்கிண்ணங்கள் பரிசில்களாக வழங்கப்பட்டன. ஈற்றில் சங்கக்காரியதரிசி பண்டிதர் ச. பொன்னுத்துரை அவர்களால் அனைவருக்கும் நன்றி தெரிவிக்கப்பட்டது. விழா சுமார் 7 மணியளவில் இனிது நிறைவேறியது.

### பரிசில் பெற்ற பாடசாலைகளின் ஒழுங்கு

1. அளவெட்டி சதானந்த வித்தியாசாலை, 2. சேர். கனகசபைவித்தியாசாலை, 3. கன்னுகம் மயிலணிச்சைவவித்தியாலை, 4, ஏழாலை செற்கு அ. மி. பாடசாலை, 5. தெல்லிப்பழை கிழக்கு சைவ வித்தியாசாலை. 6 கொல்லங்கலட்டி சைவ வித்தியாசாலை, 7. மல்லாகம் அ. மி. பாடசாலை, 8, உடுவில் முருகமூர்த்தி வித்தியாசாலை, 9. இணுவில் சைவ மகாஜன வித்தியாசாலை, 10. இணுவில் சைவப்பிரகாச வித்தியாசாலை, 11. ஏழாலை, சைவ மகாஜன வித்தியாசாலை, 12. வயாவிளான் றோ. க. வித்தியாசாலை, 13. மல்வத்தை றோ. க. வித்தியாசாலை, 14. சங்குவேலி சைவ வித்தியாசாலை, 15 மல்லாகம் விசாலாட்சி வித்தியாசாலை.

## காரைக்காலம்மையார் குருபூசை

இம் மாதம் உகூ (11-4-52) வெள்ளிக்கிழமை யாழ்ப்பாணம் சைவபரிபாலன சபை யாதரவில் வைசையினறு சைவாச்சிரம நாவலர் மண்டபத்தில் காரைக்காலம்மையார் குருபூசை கீழே காணப் பெறும் கிரமப்படி நடைபெறும்.

நிகழ்ச்சிகள்:

மாலை 6½—7 கடவுளாராதனை

இரவு 7—9 'காரைக்காலம்மையார்' என்னும் பொருள்பற்றிய பிரசங்கம் ஸ்ரீமத் சி. சுப்பிரமணிய தேசிகர், காரைக் காலம்மையார் பாடற் பாராயணமும் குறிப்புரையும் திரு. வே. சங்கரப்பிள்ளை, சைவாபிமானிகள் யாவரும் சமுகமளிப்பார்களாக.

மு. மயிலவாகனம்
சமயப்பிரசார அமைச்சர்
சைவபரிபாலன சபை
யாழ்ப்பாணம்
7—4—52.
M. 4 8—4—52.

## தேவை

சைவத்தொழில் ஆசிரியர் வியாவிற் சைவ வித்தியாசாலையில் நெசவுத் தொழில் கற்பிப்பதற்குத் தேவை.

இ. நாகலிங்கம்
மனேஜர்
சாவகச்சேரி,
5—4—52.
M. 3 8, 11 22—4—52.

## அறிவித்தல்

யாழ்ப்பாணத்தில் வசிப்பவருக்கு, மாம்பலகை விலைக்கு எடுக்க விரும்பினால் கீழ்கண்ட விலாசத்திற்கு எழுதவும்.

R. B. RANDENIYA,
Kiribathkumbura,
Peradeniya.
M. 5 8, 11—4—52

## கொழும்புக் காட்சிப் பணப் புதையல்

முதலாம் பரிசு பெற்ற AX 09198 நம்பர்ச் சீட்டுத் தம்மிடம் இருப்பதாக யாழ்ப்பாணம் அநுராதபுரி வீதி திரு. S. சின்னத்தம்பி சாட்சிச் சீட்டுப் பொறுப்பாளர்களுக்கு அறிவித்தல் கொடுத்திருக்கின்றார்.

## கோவில் திருவிழாவில் கிராமத் தொண்டர் பணி

புங்குடுதீவு, பாணாவிடைச்சிவன் கோவிலில் 41-ம் வருடம் நடைபெறும் திருநாவுக்கரசு நாயனார் குருபூசை வழமைபோல் வருகிற சித்திரை மீ 8-ந் திகதி (20-4-52) ஞாயிற்றுக்கிழமை நடைபெறும்.

ஊரதீவுக் கிராம முன்னேற்றச் சங்கமும் சனசமூகநிலையமும் அன்றையதினம் பக்தர்கட்கு வேண்டிய ஒழுங்குகள் செய்வதில் ஈடுபட்டுழைக்கின்றன. இவ்விதமாகத் திருவிழாவில் தொண்டாற்ற இச் சங்கங்கள் முன்வந்ததைப் பலரும் வரவேற்கின்றனர். குருபூசைக்கு முதல் நாள் ஷ ஆலயப்பரிபாலன சபையின் ஆண்டு விழாவும் நடைபெறும்.

## தபாற்கந்தோர் விடுதலை

11-4-52 பெரிய வெள்ளிக்காகவும், 14-4-52, 15-4-52 புதுவருடப் பிறப்புக்காகவும் தபாற்கந்தோர் விடுதலை நாட்களாகும். இந்த நாட்களில் ஞாயிற்றுக்கிழமை போலத் தந்திவேலையும் முத்திரை விற்றலும் நடக்கும்.

## கண்டி மத்தியமாகாணச் சைவமகாசபை அநுதாபம்

இலங்கையின் இணையற்ற தலைவரும், சுதந்திரத்தைத் தேடித் தந்த தேசபிதாவும், சிறந்த நிட்சண்யமான அரசியல் தந்திரியும், நிறைந்த அநுபவஸ்தருமாய் இருந்து காலஞ் சென்ற பிரதமர் கௌரவ டி. எஸ். சேனநாயக்கா அவர்களின் ஆத்மாவின் சாந்தியை வேண்டி ஷ சபையினரால் கண்டி, கட்டுக்கலைச் சித்தி விநாயகர் ஆலயத்தில் பங்குனி மீ 29-ந்வ (29-3-52) சனிக்கிழமை விசேட ஆராதனையும், வழிபாடும் நடைபெற்றது.

சபையின் நிர்வாகக்குழுவினரின் கூட்டம் அடுத்த நாள் ஞாயிற்றுக்கிழமை நடந்தது. அன்று, எதிர்பாராதவண்ணம், எம்மை விட்டகன்ற பிரதமர் கனம் டி. எஸ். சேனநாயக்கா அவர்களின் செலவைக் குறித்து அநுதாபத் தீர்மானம் ஒன்று நிறைவேற்றப்பட்டு அன்னாரின் குடும்பத்தினர்க்குச் சபையின் சார்பாய் அனுப்பப்பட்டது,

அந்தத் தந்தையின் வழிநின்று நாட்டு மக்களின் எதிர்கால நன்மையை விரும்பி அவர்களுக்குச் சேவை செய்வதையே குறிக்கோளாகக்கொண்டு பிரதம மந்திரிப் பதவியை அன்போடு ஏற்றுக்கொண்ட புதிய பிரதமர் கனம் டட்லி. சேனநாயக்கா அவர்களின் சேவை நலன்பாராட்டிச் சபையின் மகிழ்ச்சி அறிவிக்கப்பட்டது.

# மது அரக்கனை மடக்குங்கள்

## பிரசாரக் கூட்டத்தில் இயக்க நடைமுறை

இன்றைய உலகில மதுவின் வேகம் வயது வந்தவர்களிடம் மாத்திரமன்று இளைஞர்களிடத்தும் காணப்படுகின்றதுவும் அந் நிலைமையும் அற நெறி ஒழுக்கத்திற் கிருப்பிடமாகிய யாழ்ப்பாணத்தில் அதிகரிப்பதுவும் கவலையைக் கொடுக்கின்றதே! இவ்வாறு நியாயதுரந்தார் திரு மு. பாலசுந்தரம் அவர்கள் திருநெல்வேலி இந்துவாலிப சங்க மண்டபத்தில் சென்ற ஞாயிற்றுக்கிழமை (6-4-52) மாலை 6 மணியளவில் நடந்த ஒரு பொதுக் கூட்டத்திற் றலைமை வகிக்கும்போது குறிப்பிட்டு 'மதுவிலக்கு இயக்கம்' இந்த வேளையிற் பெரிதும் வேண்டப்படுகிறதென்று வற்புறுத்தினர்.

மதுவிலக்கு இயக்கத்தலைவர் Dr. C. குருசாமி அவர்கள் இதுபோன்ற ஒழுக்க இயக்கத்துக்கு ஆதரவு கொடுப்பது சமூக முன்னேற்றத்தைக் கருதராகக் கொண்டவர்களின் பெரு நோக்கமாக இருக்க வேண்டும் என்றும் இந்துவாலிப சங்கம் இந்த நன் முயற்சியில் ஈடுபடுவது மிக மிகப் பொருத்தமானது என்றும் குறிப்பிட்டார்.

அடுத்தபடியாகப் பேசிய வழக்கறிஞர் திரு. அ. அருளம்பலம் அவர்கள் மாபாதகங்களின் கேடு எல்லாச் சமயிகளுக்கும் ஒரே தன்மையதென்றும் மகாத்மா காந்தியடிகள் தம் சத்தியாக்கிரகப் போராட்டத்தில் மதுவிலக்குக்கு முக்கிய கவனம் கொடுத்தமை சத்திய வழியை நாடும் இலங்கையுள்ளாரும் மதுபானத்தை அழித்தொழிக்க வேண்டிய அவசியத்தைக்காட்டுகின்றதென்பதைத் தெளிவுற எடுத்துக்காட்டினர்.

வித்துவான் க. கி. நடராசன் B. O. L. தமிழ் இலக்கியத்திலே ஆங்காங்கு எடுத்தாளப்பட்ட நீதி வாக்கியங்களுட் கள்ளுண்ணுமை எங்கும் இடம்பெற்றிருக்கின்றதென்றும் கொலை களவு கட்காமம் குருநிந்தை என்ற பஞ்சமா பாதகங்களில் கள் நடுவண் ஆளப்பட்ட தன்மையினால் மிகக்கேடானதென்றும் ஏனைய இரு மருங்கும் வைக்கப்பட்ட பாதகங்களுக்கு இதுவே மூலகாரணமாயுள்ளதென்றும் திரிகடுகம் முதலிய நூல்களினின்றும் எடுத்தாண்டனர்.

வழக்கறிஞர் திரு. V. நாகலிங்கம் அவர்களும் வள்ளுவர் குறள் மதுவை நஞ்செனவிலக்குவதும், நீவிர வாசிகள் இலக்கிய நூல்கள் பலவற்றை வெறுத்த போதிலும் திருக்குறளை விரும்பி நிற்பதுவும் வலிகளும் கள ஒதுக்கப்படவேண்டிய தேவையைக் காட்டுகிறதென்று சொல்லினர்.

இந்துவாலிப சங்கக் காரியதரிசி திரு. சரவணமுத்து அவர்களும் ஆசிரிய கலாசாலை பண்டிதர் ஆறுமுகம் அவர்களும் இந்த இயக்கத்தை ஆதரித்துப் பேசினர்.

## நேயர்கள் நெஞ்சம்

ஆசிரியர் அவர்,

### பத்திரிகை ஓங்க

கோடி கோடியாம் கோதானம் பண்ணிய புண்ணியப் பலனிலும் மேலாம் பயன் 'சமாசக் கழகம்' கூட்டுவித்தலாற் பெறலாம். அதுவகையில் இறையருளும் இனிதே கூட்டுவிக்கும் கூடிடுஞ் சமாசக் கழகத்தில் யானும் ஓர் பங்கு பற்ற மிகுந்த ஆவலோடு சம்மதம் தந்துள்ளேன்.

இந்துசாதனம் (5-1-51) இதழில "இந்துசாதனம் என்னும் சிறந்திதழ்" என்ற தலையங்கம் தீட்டிட்ட யாழ்ப்பாணத்து நல்லூர் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலப்பெருந்தகையாரின் ஜாதகக் கிரக நிலைகளின் நன்னோக்கங்களே ஓர் பெருந் துணையாய் என் உள்ளத்துதித்தன. உதிக்கவே நாவலர் பெருமானின் புகழுடம்பாய் இந்துசாதனம் நீடூழி வளரும் என நான் கண்ட முடிபினை ஆண்டுங் குறித்துள்ளேன். அதற்கு ஓர் ஒப்பற்ற சான்று ஈண்டுங் கண்டு கொண்டேன். ஆம் அது என்னவெனின் (25-3-52) இந்துசாதனம் இதழ் சமாசத் தொண்டு விளக்கத்துள் "இந்துசாதனப் பத்திரிகை ........... தினசரிப் பத்திரிகையாய் நல்ல முறையில் நடத்தப்பட வேண்டும்" என்ற வேண்டுகோள். இத்தியாதி வைபவங்களால் இந்துசாதனம் இன்னும் பலப்பல அம்சங்கள் தன்னுட் பொதிந்து இனிய தினசரியாகவும் வெளி வரும் என்பது யாவரும் அறிவலாம். அங்ஙனம் வரும் தமிழ் நய இந்துசாதன தினசரியில் யான ஓர் சேவனாகவும் இப்போதே சம்மதம் தந்துள்ளேன்.

மெய்ப் பொருள் விளங்க மேலும் மேலும் விருத்தியாய் உலகில் இந்துசாதனமே எழிலுடன் இலங்கும் நோக்குடன் வளர்ந்து வருகின்றது. ஆயினும் அதுபற்றி நாம் அனைவரும் ஆங்காங்கு ஆம பல தொண்டுகள் ஆற்றுவோம். போற்றுவோமே.

சுபம்ஸ்ரீ நம் சுபமேயாகும்.
உங்கள் ஊழியன்,

சிவசூரியநாராயணன்,
பஞ்சாங்க கணிதர்.
இட்டமொழி,
திருநெல்வேலி,
தென்னிந்தியா.

## இலங்கை இந்தியர் மகாநாடு

இலங்கை இந்தியர் மகாநாட்டுத் தலைமைப் பதவிக்கு இந்த வருடம் போட்டி யிருக்கின்றது. இருவாளர்கள் தொண்டைமானும் அசீசும் போட்டியிடுகின்றனர். ஒற்றுமையே உயர்ந்த குறிக்கோளாயிருக்க வேண்டிய இத்தருணத்தில, போட்டி யுண்டாயிருப்பதை நினைத்துப் பலர் வருந்துகின்றனர்.

இவ்வருத்தத்தை நீக்க இத்தலைவர்கள் முன்வருவார்களா!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மனம் அடங்கும் - - - - மாண்பு உடைத்தாதல்

முதலாம்பக்கத் தொடர்ச்சி

மொழியடக்க மின்மையால் சொல்லிழுக்குப்பட்டுச் சோர்ந்து மனமழுங்கினோன் வாழ்க்கை, தன் நேர்மையினின்றும் வழுவி விடுகிறது. வாழ்க்கை வழுவியவன் பிறந்த பயனை இழந்தவனேயாகி மடிவன், ஆகலின் மொழியடக்கத்தின் இன்றியமையாமை தெற்றெனத் தோன்றும்.

மெய்யையும், மொழியையும் அடக்கித் தனதாக்கினோன், தன் மனதையும் அடக்கியாள முயலுவன்.

மெய்யடக்கமும், மொழியடக்கமும், எய்தினோன் அடக்கம் பெற்றவனாவனோ? இவற்றினும் மேலான மனவடக்கங் கொண்டவனன்றோ அடக்கம் பெற்றவனாவன்? கொடிப்பொழுதில் இவ்வுலகையும் கண்ட முகட்டை

**தென் ஆபிரிக்கா,**
**டர்பன் திரு. ச.மு. பிள்ளை**
**அவர்கள் வரைவது**

யுடைத்துக்கொண்டு அப்பாலும் சென்று திரிந்து திரும்பி வரும் மனதின் வன்மைதான் என்னே! என்னே!! அதனை யடக்கியாளுதல் எளிதன்று; எளிதன்று. "சிந்தையை யடக்கியே சும்மாயிருக்கின்ற திறமரிது" என்றார் தாயுமானாரும். எனினும் மனம் தீநெறிக்கண் செல்லவொட்டாது அடக்கியாளப் பழகுதல் மக்கள் கடனேயாம்.

மனிதன் என்னென்னவோ செய்துவிட்டேனென்று வீரம்பேசுகிறான்; காணாத புதுமைகளையெல்லாம் கண்டுபிடித்துவிட்டதாகக் களிப்படைகிறான்; தன் வல்லமையால் இவ்வுலகையே ஆட்டிவைத்திட இயலுமென்று கூத்தாடுகிறான். என்னே இவனது அறியாமை! உலகத்தையே அடக்கும் வன்மை வாய்ந்தவனெனத் தன்னைக் கருதும் பேதைமூலனர் தன்னையே அடக்க ஆற்றலில்லாத நிலைமையிலிருக்கிறான் என்பதை அறவே உணராத - உணர்ந்தும் மறந்த பதராகிறான்.

அழகிய பொருள் தோன்றுமிடத்து அதைக் காணாதிருக்கத் தனது கட்பொறியையடக்கும் ஆற்றல் மனிதனிடம் அரிதாகிறது. அவன் நினையா முன்பே அவனது கண்கள் அப்பொருள்களைக் கண்டுவிடுகின்றன. இனிய ஓசை எழுமிடத்து அதைக் கேட்காதே யென்று காதுக்கு ஆணையிட்டு அடக்கிவிட எந்த மனிதனாலாவது கூடுமா? இந்த நிலையில் மனிதன் தன்னைப் பெருமையாய் எண்ணிக்கொள்ள இடமேது? மனமடங்கிய மாண்புடையோனுக்கன்றோ இவையெல்லாம் எளிதிலாகும்?

## பொல்லா மனம்!

மனமோ எதை நினைக்கலாகாதென்று நாம் கருதுகிறோமோ, அதையே ஆயிரமுறை எண்ணி நெஞ்சைப் புண்படுத்துவதில் மிகவும் ஆசைகொண்டு முனைகிறது. உணவை உட்கொள்ளும் நேரங்களில் மலத்தை நினைத்தால் அது அருவருப்பாய்த் தோன்றுவது அனைவருக்கும் இயல்பே. எவர்கள் உணவு உட்கொள்ளும் நேரங்களில் மலத்தைக் கருதலாகாதென்று எண்ணுகிறார்களோ, அவர்கள் உணவு கொள்ளும் ஒவ்வொரு நேரத்திலும் மலத்தை நினையாமலிருப்பதில்லை யென்று உறுதியாய் உரைக்கலாம்.

இப்பொல்லா மனதை ஒரு புதிய முரட்டுக் குதிரையெனலாம். இதை நன்னெறிக்கண் செலுத்த வேண்டுமென்று எவ்வளவு முயன்றாலும் அது திமிறிக்கொண்டு தீநெறியிலேயே செல்லுந்தன்மையுடையதாயிருக்கிறது. முரட்டுக் குதிரையும் பழகியபின் பணிந்துவிடுவதுபோல மனமும் இடைவிடாத நற்பழக்கத்தால் தீநெறிக்கண் செல்லாது அடங்கிவிடுதல் பெரிதுங்கூடும்.

மனம் ஒரு நிலைப்பட்டாலும் மறுநொடியே மாறிவிடுந்தன்மையைக் கண்டே பெரியோர் அதைக் குரங்கெனச் சுட்டினர் சுட்டுகின்றனர். ஒரு விநாடியேனும் குரங்கு வாளாவிருத்தல் அரிது. ஆகலின் மனவடக்கம் பயிலுவோர் உறுதிக்கண் நின்று வெற்றிபெறுதல் வேண்டும்.

காந்தியடிகள் மொழிகின்றார்:— மனம் போனபடி நாம் அதற்கு இடங்கொடுத்தால் மனம் ஒரு வழியும் உடல் ஒரு வழியுமாக நம்மை இழுக்கும். அப்பொழுது நாம் நம்முடைய கடமையைச் செய்யத் தவறிவிட்டவர்களாவோம். நம் மனத்திலெழும் ஒவ்வொரு கெட்ட எண்ணத்தையும் அணுகவொட்டாமல் நாம் எதிர்த்துக்கொண்டேயிருந்தால் உடலும் மனமும் ஒரே நிலையிலிருக்கும் என்பதாம். அன்பர்களே! இவ்வறிவுரையைச் சிந்தித்துச் சிந்தையிற்கொள்ளுவோம்.

இங்ஙனம் மெய், மொழி, மனங்களால் அடக்கங் கொண்டோன் சீரியோனாய்த்திகழ்கிறானென்பதில் வியப்பின்று. "அடக்கம் அமரருளுய்க்கும்" என்பது பொய்யா

## அரசியல் அலை

( 1-ம் பக்கத் தொடர்ச்சி )

மாக வேண்டும் என்றும் அரசாங்க அறிவித்தல் செய்யப்பட்டிருக்கிறது.

நிச்சயப்படுத்திய அபேட்சகர்கள், கட்சிகளை எதிர்பார்க்கும் அபேட்சகர்கள் எனப் பலதிறத்தவர்களும் நித்திரையின்றி நிம்மதியின்றி யிருக்கிறார்கள்.

கட்சிகளும் ஆரம்பக் குழலோசை கேட்டுவிட்டதே என்று பந்தய ஓட்டத்திற் சாதாரணமாக ஏற்படும் அதிர்ச்சி கொண்டவர்களாய் இருக்கின்றன.

மொழியின் பொய்யா மொழியன்றோ?

காந்தியடிகள் மெய், மொழி, மனங்கள் அடக்கங்கண்ட மேலோராவர். அவர் புகழ் அனைவரும் அறிந்ததொன்று. அடங்கினோன் பெருமை அவனியிற் பெரிது, பெரிது. அடிகளின் அடக்க வாழ்வை உலகே கண்டு இன்றும் உவப்படைகிறது. அவர் தம் சீரிய வாழ்வைச் சிந்தையிற்கொள்ள விழைவோர் பலர்; விழைந்து ஒழுகுவோர் பலர்; ஒழுகி உண்மை தெளிந்தோர் பலர், எனவே அடக்க வாழ்வை - உண்மை வாழ்வை - ஒவ்வொருவரும் கடைப்பிடித்தல் வேண்டும். அதனால் மனிதன் நல்வாழ்வை நலமுறக் கொண்டோனாவன்.


**சாலாமிஸ்ரி லேகியம்**

இதனால் மூலச்சூடு, இருமல், பித்தப்பாண்டு, குன்மவாயுவு, நெஞ்செரிவு, கை கால் வலி, அசதி, அஜீரணம், வயிற்றுப் பொருமல், புளித்த ஏப்பம், மலச்சிக்கல், பீனிசம், பார்வைக் குறைவு, சூலை, சந்துவாயுவு முதலிய வியாதிகள் சூரியனைக் கண்ட பனி போல் நீங்கும். தேசபுஷ்டி, வஜீகரம், பலம் முதலானவை உண்டாகும்.

ஸ்திரீகளுக்குண்டாகும் சூதகக்கட்டு, பிரசவத்தால் உண்டாகும் பல கொடிய உபத்திரவங்கள் அதிகமாய்க் காணுதலால் நேரிடும் பல நோய்களும் தீர்ந்து, தேகத்துக்குப் பலம் உண்டாகும்.

ஒருறுத்தல் விலை ரூபாய் 25-00, அரைறுத்தல் விலை ரூபாய் 12-50, கால்றுத்தல் விலை ரூபாய் 6-75
வி. பி. பி. செலவு பிரத்தியேகம்.
வி. பி. பி: மூலமும் மருந்துகள் அனுப்பப்படும்.

**சிவஞான பற்பொடி**

சிவஞான பற்பொடியினால் காலை பல் விளக்கி வந்தால், வாய் நாற்றம், முரசு கரைதல், முரசால் சீழ்வடிதல், முரசால் இரத்தம் வருதல், பல்லில் ஆணி கட்டல் பல்லைப் பூச்சி அரித்தல் முதலிய சகல துர்க்குணங்களையும் அகற்றிப் பல்லுக்குப் பெலத்தையுங் கொடுக்கும்.

பொட்டணம் 1-க்கு விலை சதம் 25

**K. ஆறுமுகம்பிள்ளை**

எமது விலாசம் நி. 3/1 தட்டாதெரு
M 196 1-2—30-4-52. கோட்டைமுனை, மட்டக்களப்பு.



L.K.S. LEBBAY BROS
GOLD HOUSE

நல்லவாட்சிகள் கிடைக்குமிடம்
எல். கே. எஸ்.
லெப்பை பிரதஸ்
தங்கமாளிகை
கன்னாதிட்டி, யாழ்ப்பாணம்.

இலங்கையின்
மிகப்பெரிய
நகை
வியாபாரிகள்
= O =
தந்தி: "JEWELLERS"
போன்: 161.
ஸ்தானம்:
63, கன்னாதிட்டி
யாழ்ப்பாணம்.



திறமான
**தேக்க மரங்கள்**
பல தினிசுகளிலும்

திறமான
**ரூணிமார்க் ஓடுகள்**
$13\frac{3}{4}$, 14 இஞ்சிகளிலும்

வந்திருக்கின்றன
தேவைப்படுவோர் உடனே ஆடர்செய்யவும்
சேகரம் & சன்ஸ்
Std. 2 ஆஸ்பத்திரிரோட், யாழ்ப்பாணம்.


## எவ்வுயிரும் தன்னுயிர்போல் எண்ணும் நிலை

1-ம் பக்கத் தொடர்ச்சி

**"உண்மையே முழுதுமெடா"**

என எங்கள் சமயம் முழங்குகின்றது. நாம் பார்க்குமிடமெல்லாம் நீக்கமற நிறைகிறதாகக் காணவேண்டியது உயிருமல்ல, உடலுமல்ல, அம்மெய்ப் பொருளாகிய உண்மை ஒன்றையுமேயாம்.

"யார்ப்பனவெல்லாம்
பாமாயறிதல்
சீர்ப்படு போறிவுடையோர்
திறனே"

சிவனைச் சிவனாகக் காண்பதே எங்கள் சமயத்தின் சித்தாந்தம். உயிர்களைப் போற்றுவது எங்கள் சமயத்தின பிரதான விதியாகும். நம்முயிர் போலவே மன்னுயிரும், மன்னுயிர்கள் வாழ்ந்தால நாமும் வாழ்கிறோம். மன்னுயிர்கள் மாண்டால்நாமுமமாழ்கிறோம். மாந்தருக்குள்ளே பரந்த நோக்கும் விரிந்த போக்கும் உண்டாயபொழுதே இராமராச்சியம்உதயமாகும். உயிர்கள்காணமல் உள்ளுக்கிருந்து உணவை உண்கொண்டாற்றான உய்யலாமென்ற நினைப்பது வீணழல், அடுப்பங்கரையுள் விருந்துமட்டும் அரனையடைய முடியாது.

உலகில் பாவமென்றும் புண்ணியமென்றும் இரு வகையாக வினையைப் பிரிக்கின்றனர். இந்தப் பாவந்தானென்னவோ? உயிர்களுக்கிதஞ் செய்வது புண்ணியமென்பார்கள். அப்படியெனில் உயிர்களுக்கிதஞ்செய்வது பாவமாகுமல்லவா? அதமும் அதருமமும் ஒன்றுதான். காயத்தால் உயிர்களை வதைசெய்வதுதான் மட்டும் அதமென்று சொல்ல முடியாது. மனத்தாலும் வாக்காலும் உயிர்களை வதை செய்வதும் அதம்தான். அதிலும் மனித வர்க்கத்தைச் சேர்ந்தவர்களாயிருந்தாலும் மனிதருக்குரிய பொதுச சுதந்திரங்களை அவர்கள் அனுபவிக்கவிடாமற் றடுப்பது மகா பாதகமாகும். உள்ளத்திலே அன்புருகவேண்டும். உருகி நிறைந்து வழியவேண்டும். உயிரனைத்தும் நாமாக நினைக்கவேண்டும்.

"எவ்வுயிருந் தன்னுயிர்போ
லெண்ணுந் தபோதனர்கள்
செவ்வறிவை நாடிமிகச்
சிந்தைவைப்ப தெந்நாளோ'
"தாயுமானவர் சுவாமிகள்"

— சிவதொண்டன்


**யாழ்ப்பாணம் ஐக்கியலாபநிதி**

1918-ம் ஆ ஸ்தாபிதமானது.

வங்கிக்காரர் மூலநிதி 8 லட்சம் ரூபா.
இதுவரையிற் கொடுக்கப்பட்ட பங்குப் பணம் ரூபா
134,3670
100 ரூபா விகிதமான 8000 பங்குகள்

பங்குப்பணங்கட்டுமுறை.

மாசமொன்று 1ரூபா விகிதமாக 75 மாச காலத்திற்கு மாசந்தோறும் கட்டப்படவேண்டியது. குறித்த காலமுடிவில் பங்கொன்றுக்கு ரூபா 100 திருப்பிக்கொடுக்கப்படும். பங்குகள் எந்த நேரமும் வாங்கலாம்.

தினசரிப்பற்றுவரவு.

எச்சமிதி சராசரி 500 ரூபாவுக்குக் குறையாமல் இருக்குமானால் ஒரு விகித வட்டியுடன் தினசரிப் பற்றுவரவு செய்யலாம்.

தவணை வரையறுக்கப்பட்ட க்ஷேமப் பணம்.

க்ஷேமப்பணம் 3 மாசம், 6 மாசம், 9 மாசம், 12 மாசம் என்னும் காலங்கள் வரையறுத்து ஏற்படும் வட்டியும் முறையே 1 விகிதம், 2 விகிதம் 4 விகிதம் 6 விகிதமாகக் கொடுக்கப்படும்.

உண்டியல்கள்.

கொழும்பிலுள்ள "நாஷனல்" வங்கியிலும் "இம்பீரியல்" வங்கியிலும் இந்தியாவிலுள்ள பிரதான பட்டினங்களிலும் மாற்றத்தக்க விதமாகக் கொடுக்கப்படும். தொடுவாய் இராச்சியப் பகுதியிலுள்ளவர்களுக்குக் கொடுக்கவும் வாங்கவுமான விசேஷ ஒழுங்குகள் செய்யப்பட்டிருக்கின்றன.

இந்தியாகோட்டு வட்டத்திற்கு மாற்றிக் கொடுக்கப்படும்.

கடன்.

நகைகள் ஈடுவைத்துக்கொண்டு கடன் கொடுக்கப்படும். வட்டி 12 விகிதம் அறவிடப்படும். (ஈடு வைத்தவர்கள்) முதலையும் பாகம் பாகமாகக் கொடுக்கலாம்.

இன்னும் வேண்டிய விபரங்களை என்மூலமாக அறிந்துகொள்ளலாம்.

S. கனகசபை
Std. 14 20-11-46—20-11-49. சிருப்பர்.


Printed and Puplished by S. P. Kandiah, F. I. S. A. (Lond) residing at 245; Navalar Road Jaffna. or and on behalf of the Proprietors the Saiva Paripalana Sabai, Jaffna, at their Press, the Saiva Prakasa Press, Vannarponna, Jaffna on Tuesday. April 8. 1952.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org